**செய்தி வெளியீடு எண்: 518** **நாள்: 02.08.2018**

# செய்தி வெளியீடு

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மனநல காப்பகத்தில் 2018–2019 ஆண்டிற்கான மருத்துவ உளவியல் பாடப்பிரிவில் ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காக (M.Phil Degree in Clinical Psychology Course) மாணவர் சேர்க்கை 03.09.2018 முதல் துவங்கப்படவுள்ளது . இப்படிப்பிற்கான வரையறுக்கப்பட்ட காலம் இரண்டு ஆண்டுகள். இப்படிப்பிற்கான தகவல் தொடர்பு அறிக்கை (prospectus) விண்ணப்படிவம் மற்றும் ஏனைய விவரங்கள் www.tnhealth.org என்ற வலைதள முகவரியில் வெளியிடப் பட்டுள்ளது. மேற்கூறிய படிப்பிற்கான விண்ணப்ப படிவத்தினை 03.08.2018 முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் அதனுடன் இணைக்கப்பட வேண்டிய இதர சான்றுகள் அடங்கிய உறையானது செயலாளர், தேர்வுக்குழு மருத்துவக் கல்வி இயக்ககம், 162, ஈ.வெ.ரா. பெரியார் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை 600 010. என்று முகவரியிட்டு 14.08.2018 மாலை 5.00 மணி வரையில் பெறப்படும். இதற்கான நுழைவு தேர்வானது 21 .08.2018 அன்று காலை 10.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை சென்னை, கீழ்ப்பாக்கம், மேடவாக்கம் குளச்சாலையில் உள்ள அரசு மனநல காப்பகத்தில் நடைபெறும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**